1975 மார்ச் 18]

விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற இடங்களில், 5 மைலுக்குள் இருந்தால் அந்தப் பள்ளி பாதிக்கப்படும் என்ற காரணத்தால் இந்த விதி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that there is a lot of difficulty for students to get admission into high schools especially in urban areas like Madras City. The Hon. Minister has mentioned about the difficulties with regard to starting of new schools. So, will he consider whether it is not possible to give facilities for such of those schools which want to expand their institutions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இட வசதியோடு வகுப்புகளை நடத்த விண்ணப்பித்தால் அனுமதி அளிக்கப்படுகிறது. இட வசதி இல்லை என்ற காரணத்தால், ஆங்காங்கே வகுப்புகளை ஷிப்ட் சிஸ்டத்தில் வைக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். சென்னையில் சில பள்ளிகள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் நடக்கின்றன. இருக்கின்ற இட வசதியை வைத்துக் கொண்டு அதிகப்படியான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, வெங்கடாசலம் பள்ளியை ஹைஸ்கூலாக ஆக்க வேண்டுமென்று ஐந்தாண்டுகளுக்கு முன்பு கொடுத்த மனு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். இந்த ஆண்டு—1974–75-ல் 52 புதுப்பள்ளிகளைத் திறப்பது என்று சொன்னார்கள். அந்தப் பள்ளியைப் பற்றின விவரம் காணப்படவில்லை. அந்த மனு என்ன ஆயிற்று, என்ன தாமதம், எந்த விதமான பதிலும் இல்லை. காரணம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் தருகிறேன். அல்லது அம்மையார் கேட்பார்களேயானால் விவரத்தை அறிந்து சொல்கிறேன்.

*359 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, ஐந்து மைல் சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்று விதிமுறைகள் இருக்கின்றன என்று கூறினார்கள். பழையனூர் சுற்று வட்டாரத்தில் ஐந்து மைல்களுக்கு என்ன, 7 மைல்களுக்குள் கூட ஒரு பள்ளி இல்லாத காரணத்தால் அங்கே ஆரம்பப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் உயர் நிலைப்

பள்ளிக்குச் செல்வதற்கு சிரமப்படுகிறார்கள். ஆகவே, முக்கியமான இந்தப் பிரச்சினையில் அங்கே வாழ்கின்றவர்களின் நிதி வசதி இல்லாத நிலையை கருத்திற் கொண்டு விரைவிலேயே அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1974–75-ல் ஒரு உயர் நிலைப் பள்ளி துவங்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது இயலவில்லை. காரணம், முதலிலே நான் குறிப்பிட்டபடி நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றத்தக்க சூழ்நிலை அங்கே இல்லை என்று அறிகிறேன். அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற சூழ்நிலை இருக்குமானால் பரிசீலிக்கப்படும். திருப்புவனத்திலுள்ள ஒரு உயர் நிலைப் பள்ளியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பெண்களுக்கு தனித் தனி வகுப்புகள் 11-வது வகுப்பு வரை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசினர் மகளிர் கல்லூரி, திண்டுக்கல்.

*360 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் அரசினர் மகளிர் கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஓர் உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் தம் அறையிலேயே அனுமதி மறுத்து அதை எழுப்பிய உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தம் முடிவைத் தெரிவித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் இந்த மன்றத்துக்கு முன்னால் கொண்டுவரப்பட வேண்டுமென்று கொடுத்திருந்தேன், அதற்கு, மாண்புமிகு பேரவைத்